ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

பூமிதேவி பொருமையுள்ளவளென்றும் அதனால் ஸர்வம்ஸஹை (எல்லாவற்றையும் பொருத்துக்கொள்ளுமியல்புடையவ) ளென்றும் புராணங்களில் பிரசித்தமாயுள்ளது. இத்தன்மை வாய்ந்தவளாயினும் பூமிதேவி துஷ்டர்களின் கொடுமையை ஸஹிக்கமுடியாதவளென்றும் தெரிகிறது. அதனாற்றான் கம்ஸாதிகளின் உபத்திரவத்தை ஸஹிக்கமுடியாமல் பிரும்மதேவரைச் சரணமடைந்ததாக பாகவதம் முதலிய புராணங்களில் கூறப்படுகின்றது. ஸாதுக்கள் கணக்கிலடங்காமல் எவ்வளவு பேர்களிருந்தபோதிலும் பூமிக்கு பாரமாகத்தோற்றாதாம். துஷ்டன் ஒருவனிருந்தாலும் அந்த பாரம் ஸஹிக்கமுடியாதாம். பத்துமாஸம் கர்ப்பத்தில் சிசுவைச் சுமக்கும் தாய்க்கு அச்சிசு அவளது ஸ்வரூபமாகவே பாவிக்கப்படுவதால் அவளுக்கு பாரமாய் தோன்றுவதில்லை, எவ்வித உபத்திரவத்தையும் செய்வதுமில்லை. அப்படியிருந்தும் கைகால்களில் சிரங்கு கொப்பளம் வெடித்துவிட்டால் அது துஷ்டமாயிருப்பதுபற்றி ஒருநொடிப்பொழுதில் அதனுபத்ரவம் ஸஹிக்கமுடியவில்லை. அதனாற்றான் புராணங்களில் ரஜோகுண, தமோகுண மேலீட்டால் வேதசாஸ்திர புராணாதிகளில் நம்பிக்கையில்லாமல் வர்ணாசிரம தர்மங்களைத் தூஷிக்கும் துஷ்டர்களை பூபாரம் என்று வழங்கப்படுகிறது. அந்த பாரத்தைக் குறைப்பதற்காகவே பகவான் அவ்வப்பொழுது அவதரித்துக் காப்பாற்றுவதாக அபயவாக்களித்திருக்கிறார். அதிகமான பூபாரம் ஏற்பட்டிருந்தால் தானே நேரிட அவதரித்து அதை விலக்கிவைப்பார், அது ஸ்வல்பமாயிருக்குமாயின் இடிகளாலும் கொடிய நோய்களாலும் பூகம்பத்தினாலும் புயல்காற்றினாலும் மற்றும் இவைபோன்ற உபாயங்களாலேயே நிவர்த்தி செய்துவிடுவார். ஆகவே பூகம்பமுதலிய ஸம்பவங்களை உத்பாதங்களென்றும், துஷ்டர்களின் கொடுமையை ஸூசிப்பிக்கின்றனவென்றும் கற்றோர்களின் கூற்று. அந்த உத்பாதங்களைக் கண்டால் ஸாதுக்கள் நடுங்குவார்கள். அச்சமயம் பகவானின் அபயவாக்கை நம்பி ஜகத்தின் க்ஷேமத்தைக் கூறி அருந்தவம் புரிவார்கள். வர்ணாசிரமதர்மத்தை ஆதரிப்பார்கள். அதுவே ஆபத்தை விலக்கும் ஸாதனமெனக் கருதுவார்கள். அதனால் இவ்வருஷம் தேசாந்தரங்களில் ஏற்பட்ட உத்பாதங்களை விலக்க வர்ணாசிரம தர்மங்களை அனுஷ்டித்து யாவரும் சிரேயஸ்ஸை அடைவார்களாக! சுபம்!

பத்திராதிபர்.

உ

# ஆர்யதர்மம்.

பிரமோத-௵ ஆவணி-௴ சூ௨

## கோகுலாஷ்டமி.

இந்த விருதம் ஏகாதசிமுதலிய விருதங்களைப்போல் அவசிய மனுஷ்டிக்கவேண்டியதென்று ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருக்கின்றது. அது சிராவணமாஸ கிருஷ்ணபக்ஷாஷ்டமியில் செய்யவேண்டியது. உபவாஸமும் பகவதாராதனமும் இதிலவசியம் செய்யவேண்டிய காரியங்களாகும். இந்த இரண்டு காரியங்களும் திருஷ்டபலத்திலாசையில்லாமல் ஈசுவரப்ரீதியைமட்டும் விரும்பும் உத்தமாதிகாரிகளை உத்தேசித்து நித்யகர்மாவென்னும் புத்திரதனாதிதிருஷ்டபலன்களை விரும்பும் அதிகாரிகளுக்கு காமியகர்மாவென்றும் ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கின்றது. இதே புண்யகாலத்தில் வைகுண்டவாஸியான ஸ்ரீமந்நாராயணன் பகவானை ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவாக அவதரித்தார் என்றும் நந்தகோகுலத்தில் பாலலீலை முதலானதுகள் செய்தார் என்றும் ஸ்ரீமத் பாகவதாதி கிரந்தங்களில் விஸ்தாரமாய்க் கொண்டாடப்பட்டிருக்கிறது. இந்த ஸ்ரீ பகவானுடைய அவதாரமஹோத்ஸவத்தை ஒவ்வொரு கிராமங்களிலும் ஒவ்வொருகிருகங்களிலும் கொண்டாடுகிறார்கள். பாலலீலாமஹோத்ஸவத்தை உரியடிஉத்ஸவமென்று பல கிராமங்களில் நடத்திவருகிறார்கள். அதை சில கிராமங்களில் கோபாலனை(இடையனை)க்கொண்டு நடத்திவருகிறார்கள், சில கிராமங்களில் பிராமணர்களே நடத்திவருகிறார்கள். அதில் வாகூர் என்ற கிராமத்தில் இந்த உரியடிமஹோத்ஸவம் மிக விமரிசையாய் நடத்தப்பட்டுவருகிறது. தினந்தோறும் ஆலயகைங்கர்யாதிகளில் இதர ஜாதி கலப்பில்லாமலே பிராமணர்களே ஈடுபட்டுவருகிறார்கள். வாஹனாதிகளில் ஸ்வாமியை எழுந்தருளச்செய்து தூக்குவதும், தீவட்டி பிடிப்பதும், எண்ணை போடுவதும் இதுபோன்ற ஸகல காரியங்கள் நடத்துவதும் பிராமணர்களைக்கொண்டே ஆகிறது.

ஆகவே உரியடிமஹோத்ஸவத்திலும் ஸகல காரியங்களையும் பிராமணர்களே நடத்திவருகிறார்கள். அதாவது உரியடி உத்ஸவ தினத்தில் பகலில் ஸ்ரீபகவானை வெண்ணைத்தாழி நாகஷீபாக எழுந்தருளச்செய்து அக்கிரஹாரத்தில் வீதிவலமாகக் கொண்டுவந்து கடுங்கால்கரைமடத்தில் மண்டகப்படியில் இறக்கிவைத்து ஸாயங்காலத்தில் மஹாபிஷேகம்செய்வித்து பெரிய நைவேத்யம் செய்து அதை ஸேவார்த்திகளாக வந்த ஜனங்களுக்கு விநியோகம்செய்து தீபாராதனங்கள் ஆனவுடன் ஸர்வாபரணபூஷிதனாக உபயநாச்சியார் சூழ திவ்யவிமானத்தில் எழுந்தருளச்செய்து வேதகோஷத்துடனும் ஸ்ரீநாராயணதீர்த்தஸ்வாமிகளவாள் திருவாய்மலர்ந்தருளிய தரங்ககீர்த்தனபஜனகோஷ்டியுடனும் பண்டரீபுரபஜனகோஷ்டியுடனும் மற்ற பக்தர்கள் கல்நெஞ்சுமுருகும்படி பக்தியைப்பெருக்கும் அங்கப்பிரதக்ஷிணாதிகள் செய்ய "உரியடியோ கோவிந்த" என்ற சப்தம் வைகுண்டமளாவிப்பரவ வீதிவலமாய் ஆலயத்திற்குச்சமீபத்தில் விசித்திரமாக அலங்கரிக்கப்பட்ட கொட்டகையில் பகவானை நிறுத்திக்கொண்டு இடையவேஷம் போட்டுக்கொண்ட பிரார்த்தனைக்காரர்களான பிராமணர்கள் மறைந்திருக்கும் பகவானைத் தேடும் பாவனையாய் மூன்று பிரதக்ஷிணம் வந்து கண்டுபிடித்து ஸந்தோஷப்பட்ட அபிநயத்தையும் கண்ணபிரான் உரியில் தயிர், பால்சட்டி அபஹரித்த லீலையை உரியடியால் அபிநயித்து வழுக்குமரம் ஏறுதல் முதலிய மற்றும் உள்ள லீலைகளையும் அபிநயிக்க பார்ப்பதற்குப் பதினாயிரம் கண் போதாது. இந்த மஹோத்ஸவத்தை யாவரும் போய் தரிசித்து சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

॥ श्रीरामजयम् ॥

# ॥ तांबूल लक्षणम् ॥

# தாம்பூலலக்ஷணம்.

எல்லா சுபகார்யங்களின் துவக்கத்திலும் கடைசியிலும் தேவபூஜைகாலங்களிலும் ஸபைகளிலும் எல்லா ஹவ்யகவ்யாதி கார்யங்களிலும் தாம்பூலத்தை விசேஷமாய் உபயோகித்துவரு

பச்சைக்கற்பூரம், லவங்கம், தக்கோல (வால்மிளகு) சூர்ணம் துவரில்லாத செவ்வையாய் நொருக்கப்பட்டபாக்கு, பூச்சியில்லாதநல்ல தைலஸத்துள்ள ஜாதிக்காய், தாழைமடல்போல் வெளுப்பாயுள்ள வெற்றிலை சேர்ந்ததான தாம்பூலத்தை முகத்தின் அலங்காரார்த்தம் தாயே நீ அங்கீகரிக்கவேணும்—இதனால் வாஸனைதிரவ்யங்கள் சேர்த்து பொடிசெய்து பூஜைக்கு உபயோகிப்பது உத்தமம் என்று தெரிகிறது.

एलालवंगादिसमन्वितानि तक्कोलकर्पूरविमिश्रितानि ।
तांबूलवल्लीदलसंयुतानि पूगानि ते देवि समर्पयामि ॥

ஏலம், லவங்கம் ஆகியசப்தத்தால் ஜாதிக்காய், பத்திரி, வால்மிளகு கஸ்தூரி, குங்குமப்பூ முதலிய வாஸனைவஸ்துக்களும், தக்கோலம் பச்சைக்கற்பூரம் முதலியவை சேர்ந்த வெத்திலைஸஹிதமான கட்டுகள், அதாவது வடயம், உன்பொருட்டு அர்ப்பணஞ்செய்கிறேன். இதுவும் தாம்பூலத்தின் பெருமையை விளக்குகிறது. ஸ்ரீமந்திரமாத்ருகாபுஷ்பமாலாஸ்தவத்தில் ஸ்ரீ ஆசார்யாள்

सच्छायैर्वरकेतकीदलरुचा तांबूलवल्लीदलैः
पूगैर्भूरिगुणैः सुगन्धिमधुरैः कर्पूरखण्डोज्ज्वलैः ।
मुक्ताचूर्णविराजितैर्बहुविधैर्वक्त्रांबुजामोदनैः
पूर्णारत्नकलाचिका तव मुदे न्यस्ता पुरस्तादुमे ॥

ஸகல வாஸனைதிரவ்யங்களுடன்கூடின தாம்பூலம் ரத்னகாளாஞ்சியில் முன்னாடி வைக்கப்பட்டிருக்கிறது. ஹே உமே! இதில் ஆணிமுத்தைநீத்து சுண்ணாம்பு செய்து சேர்த்திருப்பதாய் இருக்கிறது. ஸாமான்ய சுண்ணாம்பைக்காட்டிலும் முத்துச்சுன்னம் விசேஷம், ராஜாக்களால் ஆகக்கூடியது. மற்றவர்களுக்கு மானஸீகந்தான்.

தேவீமஹிம்நஸ்தவத்தில் துர்வாஸாள்

तांबूलारुणपल्लवाधरयुगं ஹே அம்ப தாம்பூலத்தால்சிவந்திருக்கும் இரண்டு உதடுகள் என்றார்.

ச்யாமளாதண்டகத்தில் காளிதாஸாள்

कुन्दमन्दस्मितोदारवक्त्रस्फुरत्पूगकर्पूरतांबूलखण्डोत्करे என்றார்,

அம்பாஷ்டகத்தில் ஸ்ரீ ஆசார்யாள்

घोटीकुलादधिकधाटीमुदारमुखवीटीरसेन तनुगं ॥

என்றார்கள். தாம்பூலம் உபயோகிக்கும் விதம்

आदौ विषोपमं पीतं मध्ये च कटुतिक्तता ।
अन्ते अमृतसङ्काशं त्रिधा तांबूललक्षणम् ॥

தாம்பூலசர்வணம் செய்து முதலில் ஊருகிற நீர் விஷத்திற்கு ஸமானம் அதை உமிழ்ந்துவிடவேணும், மத்தியில் ஊருகிற நீர் காரமும் துவருக இருப்பதால் அதையும் உமிழ்ந்துவிடவேணும். மூன்றாவது தரத்தில் ஊரிவருவது சுத்தமானதாயும் உட்கொள்ள யோக்யமானதாயுமிருப்பதால் அதை அமிருதத்துக்கு ஸமானம் என்கிறார்கள்.

पूर्वान्हे क्रमुकाधिक्यं मध्यान्हेऽधिकचूर्णता ।
रात्रौ तु पत्रबाहुल्यं त्रिधा तांबूललक्षणम् ॥

காலைவேளையில் பாக்கு அதிகமாயும், போஜனமானபிறகு போடும் தாம்பூலத்திற்கு சுண்ணம் அதிகமாயும், ராத்திரியில் இலை(வெத்திலை) அதிகமாயும் உபயோகிக்கவேணும்.

வெத்திலைக்கு முன்பாக வெறும் பாக்கைத் தின்றக்கால் ஸத்குருவைக்கொன்ற பலன்தான் கிடைக்கும் தப்பாமல் என்று ஒரு பழமொழி இருக்கிறது.

வெத்திலை போட்டுக்கொள்ளும்போது ஒரு வெத்திலையின் நுனியைக் கிள்ளி எரிந்துவிட்டு அதில் மறுபடி கொஞ்சம் கிள்ளி இந்தப் பாக்குடன் சேர்த்து போட்டுக்கொள்ளவேணும். வெறும் பாக்கைத் தின்றுவந்தால் சோகைவியாதியுண்டாகும். இடது கையினால் வெத்திலைபாக்கு போட்டுக்கொள்ளக்கூடாது. தரித்திரம் உண்டாகும்.

வெறும் வெத்திலை தின்றால் உள்நாக்கு வளரும். விடியற் காலையில் போடும் தாம்பூலம் உஷ:காலதாம்பூலம் என்கிறார்கள். பிராம்மணர்கள் உஷ:காலத்தில் ஸ்நாநஸந்தியாதிகள் செய்ய வேண்டியிருப்பதால் இவர்களுக்கு அது ஒத்துக்கொள்ளாது. போஜனத்பரமும் ராத்திரியிலும்தான் ஸௌகர்யமாகும்.

ஹிருர்கள். இதன் பெருமை ஸகல லௌகிக வைதிக கார்யங்களி லும் தானகாலங்களிலும் பிரகாசிக்கிறது. விவாஹ நிச்சயகாலத் தில் நிச்சயதாம்பூலமென்றும், ஸபை பூர்த்தியாகும் ஸமயத்தில் கொடுக்கும் தாம்பூலம் ஸபாதாம்பூலமென்றும், ஆணும் பெண்ணும் உபயோகிக்கும்போது தம்பதிதாம்பூலமென்றும், தானகாலங்களில் தக்ஷிணதாம்பூலமென்றும், பூஜைஸமயத்தில் காளாஞ்சி என்றும், போஜனகாலத்தில் போஜனதாம்பூலமென்றும் பெயர் வழங்கி வருகிறது.

முக்கியமாய் பூஜாகாலங்களில் தாம்பூலம் இருக்கவேண்டி யது அவசியம்; ஷோடசோபசாரபூஜையில் தாம்பூலம் ஒன்று. தானகாலத்திலும் பூஜையிலும் சூர்ணத்தை உபயோகப்படுத்து வதில்லை.

पूगीफलसमायुक्तं नागवल्लीदलैर्युतम् ।
कर्पूरचूर्णसंयुक्तं तांबूलं प्रतिगृह्यताम् ॥

என்கிருர்கள். பாக்கும் வெத்திலையும் பச்சைக்கற்பூரசூர்ணமும் கூடிய தாம்பூலம் அங்கீகரிக்கவேணும் என்கிருர்கள். சுண்ணாம் பைப் பிரத்யக்ஷமாய்த் தருவதில்லை. போஜனகாலத்திலும் தனி யாக வைக்கிருர்கள். பார்க்கப்போனல் வெற்றிலை பாக்கு சுண் ணாம்பு இம்மூன்றும் தாம்பூலத்திற்கு முக்கிய அங்கங்களாகின்றன. வெற்றிலையின் குணம் கார்யவெற்றியைத்தருவது மந்தத்தை அடிப்பது விஷத்தைத் தணிப்பது ரஸத்தின் துர்குணத்தை மாத் துவது நாகத்தை பஸ்மமாக்குவது இப்படி உள்ளது. குழந்தை களுக்கு மாந்தம் வந்தால் வெத்திலையை வாட்டி விளக்கெண்ணை தடவி வயிற்றில் போட்டால் மாந்தம் நீங்கும். வெற்றிலையின் இருபுறமும் எருக்கின் பால் தடவி அடுக்கடுக்காய் ஒரு புது சட் டியில் வைத்து மேல்சட்டி மூடி எரித்தால் சாம்பலாகும். அதை வைச்வானரபஸ்மம் என்பார்கள். அதில் பணவிடை எடுத்து தேனில் குழைத்துக்கொடுக்க அக்கினிமந்தம் முதலிய அனேக வியாதிகள் நீங்கும். வெத்திலையும் ஓமமும் வைத்து அரைத்து ஸ்வரஸம்செய்து மண்தின்னும் கன்றுக்குட்டிகளுக்கு ஊத்தினல் கன்றுக்குட்டிகள் தெளியும். இப்படி அனேக குணங்களிருக் கின்றன.

பாக்கின் குணம்—பாக்குதுவர் வயிற்றுப்புண்களை ஆற்றும். ஆறாத புண்களுக்கு துவரெண்ணெ காய்ச்ச உதவும். சுண்ணாம்பு கிருமிகளைக் கொல்லும், துர்கந்தத்தை மாற்றும், தலைவலிக்குக் கொஞ்சம் பொட்டில் தடவலாம், காயங்களுக்கு வைத்துக் கட்டலாம், இன்னும் அனேக உபயோகங்கள் இருக்கின்றன. எல்லா தானங்களிலும் தாம்பூலதானம் பெரிது. தாம்பூலதானத்தால் லக்ஷ்மீகடாக்ஷம் உண்டாகிறது ஸ்காந்தத்தில் சிவபூஜைமகிமை சொல்லிவரும்போது ஒவ்வொரு உபசாரத்திற்கும் பலன் சொல்லி வருகிறார்.

…………साम्राज्यं पीठपूजानात् ।
सौभाग्यमतुलं सौख्यं गन्धमाल्याक्षतार्पणात् ॥
धूपदानेन सौगन्ध्यं कान्तिर्दीपप्रदानतः ।
नैवेद्येन महाभोगो लक्ष्मीस्तांबूलदानतः ॥
अष्टैश्वर्यादिसिद्धीनां जपएव हि कारणम् ।
होमेन सर्वकामानां समृद्धिरुपजायते ॥
सर्वेषामपि देवानां तुष्टिर्ब्राह्मणतर्पणात् ॥

பீடபூஜையால் ஸாம்ராஜ்யமும், கந்தம் மாலை அக்ஷதங்களால் ஸௌபாக்யமும், மதிப்பில்லாத ஸௌக்யமும் தூபத்தால் ஸுகந்தமும், தீபத்தால் தேஹகாந்தியும், நைவேத்தியத்தால் மஹாபோகமும், தாம்பூலத்தால் லக்ஷ்மீகடாக்ஷமும், அஷ்ட ஐச்வர்ய ஸித்திகள் ஜபத்தாலும், ஹோமத்தால் ஸர்வகாமனுபரிபூர்த்தியும் உண்டாகும். பிராம்மணஸமாராதனையால் எல்லா தேவதைகளும் திருப்தியடைகிறார்கள். இதில் அஷ்டலக்ஷ்மீஸாந்நித்யம் தாம்பூலத்தால் ஆனதால் பூஜாகாலத்தில் தாம்பூலம் அவசியம் இருக்க வேணும் என்று தெரிகிறது.

ஸ்ரீ ஆசார்யாள் மானஸீகபூஜையில்

कर्पूरेण युतै र्लवङ्गसहितैः तक्कोलचूर्णान्वितैः
सुस्वादुक्रमुकैः सगौरखचितैः सुस्निग्धजातीफलैः ।
मातः कैतकपत्रपांडुरुचिभिः तांबुलवल्लीदलैः
सानन्दं मुखमण्डनार्थमतुलं तांबूलमंगीकुरु ॥

தாம்பூலம் அந்த:சுத்தியைத்தருகிறது. பர்த்ருஹரிமுதலான வர்கள் தாம்பூலவிஷயமாய் எழுதியிருக்கிறார்கள். அவைகள் சிருங்காரவிஷயஸம்பந்தமானதால் அவைகளை இங்கு எழுதவில்லை.

தாம்பூலம் போடுவது எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக் கிறது. இப்போது மேல்நாட்டு நாகரீகம் வந்து ஹூணபாஷை படித்திருக்கும் சிலர்கள் தாம்பூலத்தால் ஒருபிரயோஜனமுமில்லை. அதில் சேரும் ஸாமான் உடம்பைக் கெடுக்கிறது என்று சிலர் உபயோகிப்பதை நிறுத்தியிருக்கிறார்கள். கல்யாணம் முதலிய சுபகார்யங்களிலும் பெரிய விருந்துகளிலும் போஜனமானபிறகு வைதிகர்கள் லௌகிகர்கள் வைதிகமும் லௌகிகமும் கலந்துள்ள வர்கள் எல்லாரும் ஒன்றாக உட்கார்ந்துகொண்டு தாம்பூலம் வழங் கும்போது வேண்டியவர்கள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். வேண் டாதவர்கள் தாம்பாளத்தை இரண்டு கைகளால் தொட்டு தாம்பூ லத்திற்கு மரியாதை செய்கிறார்கள். எடுத்துக்கொள்வதில்கூட எடுத்துக்கொண்டவர்கள் செவ்வையாய் இலைகளை துடைத்தும் பாக்கை வெட்டியும் சூர்ணத்தை நனைத்தும் சுத்தமாய்ப்போட்டுக் கொள்ளவேணும்.

अखण्डितं च क्रमुकं अप्रक्षालितपत्रकम् ।
अनार्द्रचूर्णसंयुक्तं शक्रस्यापि श्रियंहरेत् ॥

இப்படி செய்யாவிட்டால் இந்திரனுலும் ஐசுவர்யம்போய்விடும். பாக்கு வெட்டாதபக்ஷத்தில் அதில் பூச்சியிருக்கும். வெத்திலையை அலம்பாவிட்டால் அவைகளின் பின்புறம் கண்ணுக்குத்தெரியா மல் உள்ள பூச்சிகள் போகமாட்டா. சூர்ணம் நனையாவிட்டால் புரையேரும். வெத்திலை போடுவது ஜாக்கிருதையாய்ப் போட வேணும். சிலருக்கு உடனே மயக்கம் உண்டாகும். அம்டி மயக் கம் நீங்க உப்பை வாயில் போட்டுக்கொண்டால் மயக்கம் தெளி யும், நெய்யை விழுதாய் விழுங்கினல் மயக்கம் தெளியும். இந்த உபத்திரவத்திற்காகத்தான் பாக்கைப்பொடிசெய்து வாஸனைகட்டி உபயோகிப்பது.

பாக்கைப் பொடி செய்யும் விதம்:—

பாக்கில் தெக்கம்பாக்கு, கொட்டைப்பாக்கு, அலகுபாக்கு, சாயப்பாக்கு, வெட்டுப்பாக்கு, பட்டணம்பாக்கு, எதுவானுலும் ஸரி,சிறுதுண்டுகளாய் வெட்டி முதல்நாள் ஜலத்தில் ஊரப்போட்டு

மறுநாள் காலையில் நன்றாகக்கழுவி கல்லொரவில் போட்டு நன்றாக துவைத்து தாம்பாளத்தில் வைத்து உலர்த்தி மறுபடி உரலில் போட்டு துவைத்தால் மிருதுவான பொடியாகும். அத்துடன் ஜாதிக்காய், பத்திரி, ஏலம், கிறும்பு, வால்மிளகு, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், கஸ்தூரி, தக்கோலம், கொஞ்சம் சித்தாத்தை இவைகளை சேர்த்து பிசைந்து கொப்பரைத்தேங்காயை பட்டை சீவி சிறு துண்டுகளாக செய்து கலந்து ஸத்யோகோகிருதம், அதாவது பசும்பால் காலையில் உரைகுத்தி மத்தியானம் கடைந்து வெண்ணெய்எடுத்து உருக்கி ஷடி தாளிவிட்டு பிசைந்து வைத்துக் கொண்டு உபயோகித்தால் ஆரோக்கியம், தேகபுஷ்டி, சரீரகாந்தி, வாக்குசுத்தி, இந்திரியசுத்திமுதலிய அனேககுணங்களுண்டாகும். வேண்டாதவனுக்குவெரும் வெற்றிலை வெத்திலையை பாக்கியில்லாமல் தாலாகாது. தாம்பூலத்தில் காமோத்திரேகாதி குணங்களும் இருப்பதால் அதை பிரம்மசாரி, ஸன்னியாஸி, வானப்பிரஸ்தாள் உபயோகிப்பது தகுதியன்று ஸம்ஸாரி ஒருவனுக்கே அது விசேஷ உபயோகமென்று தெரிகிறது.

सिरा बुद्धिविनाशिनी வெற்றிலையின் நரம்பில் வங்கலத்திருப்பதால் அதைச் செவ்வையாய் கிழித்து எறிந்துவிட்டு உபயோகம் செய்யவேணும். சுண்ணாம்பை நகம் படாமல் தடவவேணும். நரம்புடன் தின்னால் புத்திமாந்தியம் உண்டாகும்.

வெற்றிலைக்கு உஷ்ணம் உண்டாக்கக்கூடிய சக்தியுண்டு. பிரஸவித்தவர்களுக்கு கஸ்தூரியை வெற்றிலையில் சுத்திக்கொடுக்கிறார்கள். குளிர்ச்சி வாராதபடி தடுப்பதற்காக பாராசர்ஸ்மிருதியில் ஒரு பாக்கை புஜிப்பது ஸுகத்தையும் ஆரோக்யத்தையும் தருவதாகும். இரண்டு பாக்கு பலனில்லை, மூன்று சிரேஷ்டமாம். இதற்கு அதிகம் உத்தமம்.

வெற்றிலையின் அடியை புசித்தால் வியாதியும், நுனியால் பாபமும், முன்புறம் சுண்ணாம்பு வைத்த வெற்றிலையால் ஆயுள் குறைவும், நடுவிலிருக்கும் நார்களால் புத்திநாசமும் உண்டாகும் என்றிருக்கிறது. சுண்ணாம்பு தடவுவது நகம் படாதபடி தடவவேணும்.

புகையிலையைச்சேர்த்து உபயோகிப்பது இப்போதுவழக்கத்தில் விருத்தியாகிவருகிறது. அது ஒரு மயக்கவஸ்து, பித்தத்

றைத்தூக்கிவிடுகிறது. நாக்கைத் தடிக்கச்செய்து வார்த்தைகளை தாமஸிக்கச்செய்கிறது. புகையிலைபோடுகிறவர்கள் கிட்டவிருந்து பேசினால் ஒரு கெட்ட நாற்றம் வருகிறது, வைத்தியர்களுமதை உபயோகிப்பது நன்மையில்லை என்று சொல்லுகிறார்கள். அதை வைதிகர்கள்உபயோகிப்பது ஆசாரபங்கம்தான் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

**न कलञ्ं भक्षयेत्** மயக்கவஸ்துக்களைஉபயோகிக்காதே என்றிருக்கிறது. புகையிலை மேல்பிரயோகத்திற்கு ஆகும். புகையிலை கடையைச் சுட்டு சாம்பலாக்கி நல்லெண்ணெயில் குழைத்து கால்களில் உண்டாகும் வெடிப்புகள் ஆறாத புண்களுக்கு தடவிவர எதிர்பாராத குணமுண்டாகும். புகைபிடிக்க ஆறாத விரணங்கள் ஆறும். அதிலுள்ள கிருமிகள் செத்து உதிர்ந்துவிடும். இப்படி மேல்பிரயோகத்துக்கு உபயோகம். அதை தாம்பூலத்தில் சேர்த்து உபயோகிப்பது சிஷ்டாசாரபத்ததிகளுக்கு அதிருப்திகரமானது. ஜபகாலங்களிலும் பெரியோர்கள் ஸந்நிதானங்களிலும் தாம்பூலம் போட்டுப் போவது உசிதமன்று. இப்படி தாம்பூலத்தைப்பற்றி தெரிந்தவரை எழுதியிருக்கிறேன்.

பனையப்பட்டி வெங்கடேசய்யர்.

---

## அகில இந்திய ஒடுக்கப்பட்டவர் மஹாநாடு.

இம்மஹாநாடு ஒன்று சென்ற வெள்ளியன்று நாகபுரியில் ஆரம்பமாயிற்றென்றும் அதில் பம்பாய் சட்டகலாசாலை ஆசிரியர்களில் ஒருவரான டாக்டர் அம்பேத்கார் அக்கிராஸனம் வகித்தாரென்றும் 11—8—30 திங்கள் மித்திரனில் பத்திராதிபர்கலத்தில் வரையப்பட்டிருந்த விஷயம் அப்பத்திரிகையைப்படிப்போரின் கண்களில் தென்பட்டிருக்கும். இதில் அப்பத்திராதிபர் தீண்டாதவர்களென்று ஒதுக்கப்பட்டவர்களென்கிறார். இதற்கு அர்த்தமே இல்லையென்று பல தடவை நம் பத்திரிகையில் விளக்கியிருக்கிறேன். தீண்டத்தகாதவர்களென்று வேதசாஸ்திரம் சிலரைச் சில சமயத்திலும் சிலரைச் சில நாளிலும் சிலரை தேகம் உள்ளமட்டிலும் சிலரைச் சற்றுதூரத்திலும் சிலரை வெகுதூரத்திலும் சிலரை

சமீபத்திலிருந்தும் தொடாமலும் ஒதுக்கிவைக்கிறது. இதற்கெல்லாம் அநுதிஸித்தமான சாஸ்திரம் தான் நமக்குப்பிரமாணம். ஆனால் இத்தகைய ஒருவரிடத்திலாவது மனதில் விரோதபுத்தியே கிடையாது. மற்று அவர்களிடத்தில் அவரவர்கள் யோக்யதைக்குத் தக்கவாறு ஏராளமான பிரியத்தையே செலுத்திவந்திருக்கிறோம். நம் மனைவியை மாதவிடாய்காலத்தில் முதல்நாள் 40அடிக்கப்பாலேயே நிறுத்துவோம். மறுநாள் 30. பிறகு 20. கடைசியில் 10 அடி விலக்கு என்பது சாஸ்திரம். நாம் புசிக்கும்போது அவர்களின் பேச்சு காதில் விழக்கூடாது.

उदक्यामथ चण्डालं श्वानं कुक्कुटमेववा ।
भुंजानो यदि पश्येत्तुतदहं तु परित्यजेत् ॥
चण्डालपतितोदक्या वाक्यं श्रुत्वा द्विजोत्तमः ।
भुंजीत ग्रासमात्रं तु दिनमेकमभोजनम् ॥

பகிஷ்டா ஸ்திரீயையோ சண்டாளனையோ, நாயையோ, கோழியையோ ஒருவன் புசிக்கும்போது பார்ப்பானேயாயின் அன்று தினம் போஜனம் செய்யக்கூடாதென்றும், சண்டாளன் பதிதன் பகிஷ்டாஸ்திரீயின் வார்த்தையைப் புசிக்கும்போது பிராமணன் கேட்பானேயாயின் ஒரு நாள் முழுதும் போஜனம் செய்யக்கூடாதென்றும் கூறுகிறது. இதைப் பெரியோர்கள் அநுஷ்டித்து வருகிறார்கள். சாப்பிடப்போகிறார் பேசாதே என்று சொல்லிவிடுவார்கள். இது அவர்களிடம் த்வேஷத்தைத்தான் காட்டுமோ இல்லை. இது சாஸ்திராநுஷ்டானத்தை விளக்கும். அன்னாட் சென்றுவிட்டால் அவர்கள் வீட்டிற்குள் வந்துவிடுவார்கள். அன்று தம்பதிகளின் பிரீதியை யாருமறிவார்கள். ஆகவே இவர்கள் கொஞ்சநாள் விலக்கப்படுகிறார்கள். இனி தீண்டல் வந்தால் 10நாள் தொடப்படாதென்கிறார்கள். அவர்கள் தொட்ட பாத்திரத்தைத் தொடக் கூடாதாம். அவர்கள் நம் பந்தியில் சேர்ந்து புசிக்கக்கூடாதாம். இங்கு இதனால் 10 நாள் விரோதம் கொண்டாடுகிறோமா? பிரஸவித்த ஸ்திரீயை 40 நாள் ஒன்றையும் தொடாதே என்கிறோம். இவ்வளவுக்கும் சாஸ்திரம் தான் காரணம். விரோதம் காரணமல்ல. அதுபோல் ஜன்மம்முழுமையும் தீண்டத்தகாதவர்கள் என்று சற்று தூரத்தில் விலக்கிச் சிலரை

வைக்கிறோம். அவர்களைப் பறையர் என்றும் சக்கிலியர் என்றும் இன்னும் பலவாறு அழைக்கிறோம். நாபிதன் வண்ணான் இவர்கள் கிராமத்தில் பிரவேசிக்கத்தக்கவர்களாயினும் 20 அடி விலகிப் போகச் சொல்கிற வழக்கம். நான்காவது வருணத்தவர்களை பக்கத்தில் இருக்கச் சாஸ்திரம் இடம்கொடுத்தபோதிலும் அவர்கள் தொடத்தகாதவர்களென்போம். ஆகவே சாஸ்திரம் ஒன்றை மட்டும்கொண்டு வியவகாரம் செய்யும் நமக்கு ஒருவரிடத்திலும் த்வேஷபுத்தி கிடையாது அவர்களிடத்தில் அனுதாபம் தான் அதிகம். ஆகவே ஒடுக்கப்பட்ட ஜாதியென்று இத்தகையவர்களுக்கு பெயர்கொடுத்தழைப்பது புதிது. இதனுல் நம்மை ஒடுக்கிவிட்டஜாதியொன்று நமக்கு மேலிருக்கிறது என்று அவர்களை குத்திவிட்டு முதல் ஜாதியாரோடு சண்டைபோட கிளப்பி விடுகிறதும் இக்காலத்தில் தான் புதிது. இப்போது இந்தியாவுக்கு க்ஷேமத்தைக் கருதும்சிலர் இவ்விதம் கூறிக்கூறி பரஸ்பரத்வேஷத்தையே வளர்த்துவிட்டுக்கொண்டு எல்லோரையும் ஒன்று சேர்க்க வழிதேடுகிறார்களாம். இது வழியாகுமா? பிரகிருதத்தில் டாக்டர் அம்பேத்கர் மிக புத்திசாலித்தனமாய்ப் பேசியிருப்பதை மெச்சுகிறோம். அவர் அபார சாமர்த்தியமுடையவர் என்றும் பரந்த ஞானமுடையவர் என்றும் மித்திரன் பத்திராதிபர் கூறுவதை நாமும் ஏற்போம். ஆனல் இந்தியா முன்னேற வேண்டுமானல் ஜாதிமதம் ஒழியவேண்டும். அப்போது தான் ஸ்வாராஜ்யம் கிட்டுமென்று காங்கிரஸ்காரர் பாடிக்கூத்தாடி வேலை செய்வதை அவர் ஒப்புக்கொள்ளாமல் அவர்களுக்கு நன்கு புத்தி புகட்டுகிறார். இது காங்கிரஸ்காரர்கள் காதில் விழுந்து அவர்கள் அம்பேத்கரின் மொழிகளைக் கூர்ந்து கவனித்து திருந்திவிடுவார்களேயாயின் அன்றுமுதல் நம் தேசத்திற்கு ஸ்வதந்திரம் பாவ ஆரம்பிக்கும். அம்பேத்கர் கூறும் வசனம் இது.

தேசம் ஸ்வாராஜ்யம் பெறவேண்டுமானல் அங்கு பல ஜாதி பலமதம் என்பதில்லாமல் ஒன்றுபடவேண்டுமென்பது நொண்டி சமாதானமாகும். கானடா ஸ்வாராஜ்பாதிகாரம் பெறுவதற்கு முன் அதில் பிரஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். அவர்களுக்குள் ஜாதிபேதம் மதபேதம் பலமாக இருந்தும் அவர்கள் சுயராஜ்யத்தின் பலனுக ஒரு ஜனமாகத்திரண்டுவிட்டனர். ஐரோப்பாவில்

நடந்த மகாயுத்தத்தின் முடிவில் ஏற்பட்ட லட்வியா, ருமேனியா, யூகோஸ்லாவியா, ஸெச்சோஸ்லாவோகியா முதலிய ராஜ்யங்களில் யூதர்கள், ருஷ்யர்கள், ஜர்மனியர்கள், மேகியர்கள் முதலிய பல வேறு மதங்களைத் தழுவினவர்களாய் இருந்தும் அவர்கள் ஸ்வாராஜ்யாதிகாரம் நடத்திவருகிறார்கள். ஆகவே இந்தியாவிலும் பல மதங்களைத் தழுவியுள்ள பல ஜாதியினர் இருப்பதால் ஸ்வாராஜ்யாதிகாரத்தை இந்தியர்களுக்கு மறுக்கக்கூடாதென்று அவர் கூறுகிறார். ஆனால் இவ்விஷயம் மித்திரன் பத்திராதிபருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லையென்பதை இலகுவாய்க் காட்டுகிறார். இதிருக்கட்டும் பிறகு அம்பேத்கர் அக்கிராஸனஸ்தானத்தில் கூற வேண்டியவிஷயத்தையும் விடாமல் அவர்களுக்குப் புத்தி கூறும் போது காங்கிரஸ்காரர்கள்போல் பொது ரஸ்தாவிலும் கோவிலிலும் குளம் கிணறுகளிலும் நம் தீண்டாச்சகோதரர்கள் பிரவேசிக்கலாமென்று கூறாமல் அந்தந்தச்சிறுவகுப்பின் ஜனத்தொகையின்படி அதற்குச் சட்டசபையில் கிடைக்கக்கூடியதைக்காட்டிலும் அதனதன் அந்தஸ்து முதலிய காரணங்களை உத்தேசித்துச் சில அதிகஸ்தானங்கள் அதற்குக் கொடுக்கப்படவேண்டுமென்றும் சிறு சமூகஉரிமைகளை ராஜாங்க அமைப்பில் சொல்லிவிட வேண்டுமென்றும் இம்மாதிரி விஸ்தாரமாக் கூறிவிட்டால் இது மிக அர்த்தபுஷ்டியுள்ளது. இவ்வசனம் அக்கூட்டத்திற்கும் ஓர் ஆறுதலைக்கொடுக்கும். வர்ணாச்ரமிகளுக்கும் சந்தோஷத்தை உண்டுபண்ணும். எதுவும் ராஜாங்க மூலம் தான் வரவேண்டும் என்பதே டாக்டர் அம்பேத்கரின் அபிப்பிராயமென்பதை மெச்சுகிறோம். இனி புதிய ராஜாங்க அமைப்பில் என்னவாகுமோ அதை எதிர்பார்த்து நிற்போம்.

---

கோவர்த்தன மடாதிபதிகளான
108 ஸ்ரீமத் சங்கராசாரியரவர்களது

# திருவாக்கு.

பிராமணஸம்மேளனபத்திரிகை 3-வது வருடத்திய 2-வது பத்திரிகையிலிருந்து மொழிபெயர்த்தது.

இப்போது நம் தேசத்தில் ஸ்வராஜ்யவிஷயமாய் எந்தக் கோலாகலம் நாளுக்குநாள் அதிகரித்து நம் காதில் முழங்கு

கிறதோ இது அனாதிகாலமாய் இயற்கையாய் ஏற்பட்டுவருகிறது என்பதை விவேகசாலிகளான புருஷர்கள் அறிகின்றனர். ஸ்வாராஜ்யமென்றால் என்ன? ஸ்வாதீனமாய் இருத்தல், இப்போது நாம் ஸ்வாதீனமாய் இல்லாமல் மேற்றிசையோர்களின் ஆளுகைக்குட்பட்டுப் பராதீனப்பட்டிருக்கிறோம். அவர்களது கட்டளைக்கு உட்படாமல் விலகினால் அதுதான் ஸ்வாராஜ்யமென்றல்லவா இப்போதைய மேதாவிகளின் அபிப்பிராயம். எப்படியெனில்— ஸ்வாராஜ்யமென்றால் பிறருக்குக் கட்டுப்படாமலிருத்தல், அதாவது வேறுவிதமாய்ச் சொன்னால் விடுதலையடையவிரும்புவது, மோக்ஷமடைய விரும்புவது ஸ்வாராஜ்யபதார்த்தம் என்றாகும். ஆதல்பற்றியே மோக்ஷம் என்பது பாரதவர்ஷ ஸனாதனதர்மத்தில் முக்கியமான அங்கமாய் ஏற்பட்டிருக்கிறது. ஸனாதனதர்மத்தின் முக்கிய மர்மமான ஸித்தாந்தம் இதுதான் என்பதையே விளக்க

மனு—

सर्वं परवशं दुःखं सर्वमात्मवशं हितम् ॥

பரவசமாய் இருப்பதெல்லாம் துக்கம், ஆத்மவசமாய் இருப்பதுதான் சுகம் என்றார். ஸ்வல்பப்பாரதந்திரமாயினும் இருக்கலாம் என்றுகூட நம் ஸனாதனதர்மங்களை வெளியிடுகின்ற சாத்திரங்கள் ஒப்புக்கொள்கிறதே இல்லை. அவ்விதமிருக்க மேற்றிசையோர்களின் பாசப்போன்ற சாஸனத்தையா ஏற்கும். மோக்ஷமடைய விருப்பமென்பதும் மனிதர்களான நமக்குமட்டும்தான் இஷ்டமென்பதல்ல. மற்று உலகில் இரண்டுகால் நான்குகால் ஜந்துக்களுக்கும் உயிருள்ள பிராணிகள் யாவுக்குமே இயற்கையில் மிக விருப்பமுள்ளதாகவே காண்கிறது பாருங்கள். மிக அல்ப ஜந்துவான ஈ எறும்பு ஒன்றைக் கைக்குள் மூடிக்கொண்டால் அல்லது சிறு ஜந்துவை நூலாற் கட்டினாலும் தன் சக்திக்கேற்றவாறு முயற்சிசெய்து கட்டை விலக்கிக்கொண்டு ஸ்வதந்திரமடையவே வழிதேடுகிறது. அப்போது நம்மைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமோ? இதுதான் மோக்ஷமடைய விரும்பும் தன்மையெனப்படும். ஆகவே நம் எந்த ஸனாதனதர்மம் ஸ்திரமான ஸனாதனதர்மத்தை அனாதிகாலமாய்க் கோஷிக்கிறதோ, அத்தகைய ஸனாதனதர்மத்தைப் பரம்பரையாய் அனுஷ்டிக்கும் ஜனங்கள் ஸ்வாராஜ்யம் வேண்டாமென்று சொல்வார்களென்று புத்திமான் நம்புவானா?

அத்தகைய ஸநாதன தர்மத்தின் ஸித்தாந்தத்தை அறியாமல் தான் இப்போது நம் தேசவாஸிகள் பாரதீனமென்னும் வலையில் சிக்குண்டு கஷ்டமனுபவிக்கின்றனர்.

மேற்றிசையார்களிலும் பிரஸிடெண்ட் வில்ஸன் முதலிய பிரஸித்த புருஷர்கள் மனு கூறிய சுலோகத்தின் அர்த்தத்தையே கூறிக்கொண்டு ஸ்வதந்திரத்தையே விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் மோக்ஷபரியந்தம் போகவில்லை. அவர்கள் ஸ்வாதீன மென்பதின் ரகஸ்யத்தை எம்மட்டறிந்தவர்களென்பது உங்களுக்கே தெரியும். நம் தர்மம் இன்னதென்று தெரிந்துகொள்ளாமல் பிறரது வம்புகளிலேயே ஆசையையும் வெறுப்பையுமடைந்துகொண்டு நாம் கஷ்டமென்னும் ஸமுத்திரத்தின் மத்தியில் தவிக்கிறோமென்பதுதான் இக்காலத்தில் மிகஆச்சர்யத்தையும் துக்கத்தையும் கொடுக்கிறது. அதோடல்லாமல் இன்னும் அவ்வழியிலேயே போய்க்கொண்டு பின் ஸந்ததியையும் மூழ்கடிக்க வழி தேடுகிறோம்.

ராஜ்யம் முதலிய வெளிவஸ்துக்களை அபகரித்துக்கொண்டதால்மட்டிலும் பாதந்திரமேற்பட்டதென்று ஸநாதனதர்மம் நின்றுவிட்டதா இல்லை. மனதுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கிற ராகம் த்வேஷம் முதலிய உள்சத்துருக்களால் ஏற்படும் பாரதந்திரியம் மிகக்கொடியது. அதனால் அத்தகைய பாரதந்திரியத்திற்கு ஏதுவான சத்துருக்களையும் வேற்பிடுங்கலாய்க் களையவேண்டுமென்றும் நம் ஸநாதனதர்மம் நம்மைத் தட்டி எழுப்புகிறது. எவர்கள் பாரதந்திரியமென்னும் இருண்ட குகையினின்றும் கிரமப்படி வெளியேற்ற வழிகூறும் நம் ஸநாதனதர்மத்தின் மகிமையைச் சற்றும் அறியாமலும் கவனியாமலும் அதற்கு விரோதமான வழியால் பாதந்திரபாசத்தை அறுக்க முயலுகின்றனரோ அவர்கள் முன்னிலையில் நாங்கள்தான் ஸ்வாதீனம் என்றும் ஊஞ்சலை ஆட்டிவிடுகின்றோம். அல்லது அதை சிருஷ்டித்தவர்கள் நாங்கள்தானென்று சொன்னால் ஆச்சரியமாய்த் தோன்றும். பிரஸிடெண்ட் வில்ஸன் உத்தேசிக்கும் 14 விஷயங்களையோ காந்தி கூறும் 16விஷயங்களையோ ராஜ்யப்பிரதிநிதி ஒப்புக்கொள்ளட்டும். அதனால் ஸந்தோஷமாய் மனோரதபூர்த்தி என்று மற்றவர்களும் ஏற்கட்டும். ஆனால் வர்ணாச்ரமஸ்வாராஜ்ய சங்கத்தார் தங்களு

டைய கார்யமும் முடிந்துவிட்டதென்று ஸனாதனதர்மப்படி உத்தேசிக்கப்பெற்ற ஸர்வஸ்வாதந்திரியத்தை அடையாமல் கொஞ்சமும் ஒரு அடிகூட பின்வாங்கமாட்டார்கள். மேற்றிசையார்களால் பாரதஜனங்களான நம்மிடம் பலமாய்ப் படிப்படியாய் ஏற்றப்பெற்ற சாஸனங்களில் ஏதோ சிலவற்றை விலக்குவதால் ஒருபோதும் ஸந்தோஷமடையமாட்டோம். நம்மிடம் அவர்களேற்றியிருக்கிற எல்லா அதிகாரத்தையும் விலகிவிடத்தான் முயற்சி செய்வோம்.

உண்மையில் ஸனாதனதர்மத்தின் அங்கமான வர்ணாச்ரமதர்மத்தை எவ்வழியில் பரிபாலனம் செய்யவேண்டுமோ, அவ்வழியால் அதைப் பரிபாலித்தால் நமக்கு ஸ்வாராஜ்யம் தன்னாலேயே நம் கையில் வந்துசேரும். வர்ணாச்ரமதர்மத்தைப் பரிபாலிக்காமல் விட ஆரம்பித்து வரவர அதில் த்வேஷம் எவ்வளவுக்கெவ்வளவு நமக்கு ஏறுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பாரதந்திரியம் பலமாய் நம் தலையில் ஏறி அதிக உபத்திரவம் ஏறுகிறதென்பதை கவனிக்கவும்.

यः शास्त्रविधिमुत्सृज्य वर्तते कामकारतः ।
न स सिद्धिमवाप्नोति न सुखं न परां गतिम् ॥

எவன் சாஸ்திரவிதியை விட்டுவிட்டு தன் இஷ்டப்படி நடக்கிறானோ அவன் இஷ்டஸித்தியை அடையப்போகிறதில்லை. சுகத்தை அடையமாட்டான். பரகதியும் கிடையாதென்கிறார் கிருஷ்ண பகவான்.

சாஸ்திரீயமரியாதையை விலக்கி கார்யம் செய்பவனுக்கு இஷ்டசித்தி கிடையாதென்பது நிச்சயம். ஒருசமயம் கிடைப்பதுபோல் தோன்றியபோதிலும் அதற்கு நம் சாஸ்திரத்தின் ஆதாரமில்லாததால் அது நெடுநாள் இராது. ஸ்பெயின் ஸ்பார்ட் ரோம் முதலிய ஜனங்களுக்குப்போல நிர்மூலமாய்த்தான் செய்யத்தக்கது செய்யத்தகாததென்ற பகுத்தறிவுஏற்படவேண்டும் ஸ்வாதீனத்தையடைய இவ்வழியில் ஆசைவைக்கவேண்டுமென்று சாஸ்திரமே உபதேசிக்கிறது.

(தொடரும்)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.